# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்

**முன்னிலை – திரு.எஸ்.பி.பரத் குமார், M.B.A.,L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

**2026 ம் வருடம், மார்ச் மாதம், 11 ம் நாள், புதன் கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 251/2026**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1044/2025**

வினோத் (எ) ஸ்டைல் பாண்டி (25/26),

த/பெ. ஆசைத்தம்பி மனுதாரர் / எதிரி

/ எதிர் /

தமிழக அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

வெங்கமேடு காவல் நிலையம்,

(குற்ற எண். 248/2025) எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர்

இம்மனுவானது 11.03.2026 இன்று என் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் / எதிரி தரப்பில் வழக்கறிஞர் எம்.முகமது இஸ்மாயில்,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்களும், எதிர்மனுதாரர் / அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 2, அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

2. மனுதாரர் / எதிரி மீது வெங்கமேடு காவல் நிலைய குற்ற எண்.248/2025 BNS 126(2), 296(b), 115(2), 351(3), 309 (2) BNS–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, எதிரி 21.09.2025 ம் தேதி முதல் காவலில் இருந்து வருவதாகவும், எதிரியை நிபந்தனையுடன் கூடிய பிணையில் விடுவிக்கக் கோரி, பி.என்.எஸ்.எஸ். பிரிவு 480 ன் கீழ் பிணை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் / எதிரியை பிணையில் விட ஆட்சேபனை உள்ளதா? என்பது குறித்து அரசு உதவி வழக்கறிஞர் மற்றும் காவல் துறையினருக்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. மேற்படி பதிலில், இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் சாட்சிகள் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும் எதிரி மீது வேறு சில குற்ற வழக்குகள் உள்ளதாலும், எதிரிக்கு பிணையம் வழங்கினால் மீண்டும் இதே போன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி கலைக்கக்கூடும் என்பதாலும், இவ்வழக்கின் எதிரிக்கு பிணை வழங்கும்பட்சத்தில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகிவிட வாய்ப்புள்ளதால் எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பில், இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் சாட்சிகள் விசாரணை நிலையில் உள்ளதாகவும், எதிரி மீது மேலும் சில குற்ற வழக்குகள் உள்ளதாகவும், எதிரியானவர் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர் என்றும் தெரிய வருகிறது. எனவே, இந்நிலையில் எதிரிக்கு பிணையம் வழங்கினால் மீண்டும் இதே போன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மனுதார் / எதிரியை பிணையில் வெளியே விட்டால் அவர் தலைமறைவாகிவிட வாய்ப்புள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாளாகிய இன்று அவையறிய என்னால் பகரப்பட்டது.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**